279—

ஓட்டுநர் தொழில்நுட்பக் கல்லூரி

***57856—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதியில் ஓட்டுநர் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஓட்டுநர் தொழில்நுட்பக் கல்லூரி துவங்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். அப்படி, இதுகாறும் எங்கேயும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகக் கேட்டிருக்கின்றாரா என்பதை முதலில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி IRT சம்பந்தப்பட்டது. அதை நான் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன்.*

"வையகம் காப்பவரேனும், சிறு வாழைப் பழக்கடை வைப்பவரேனும் பொய்யலகத் தொழில் செய்வோர் பூமியில் எங்கணும் மேலோர்" என்ற பாரதியின் கூற்றுப்படி 98 மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களானாலும் சரி, 10,073 சிறு, குறு முதலீட்டாளர்களானாலும் சரி 'எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் சரிநிகர் சமானம்' என்று 2,42,160 கோடி முதலீடுகளை ஈர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, தென் மாவட்டங்களில்

உற்பத்தித் துறையில் ரூபாய் 50,000 கோடிக்கு மேலும், எரிசக்தி மற்றும் மரபுசாரா எரிசக்தித் துறைகளில் ரூபாய் 50,000 கோடிக்கு மேலும் முதலீடுகளை ஈர்த்த உன்னதத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, solar தொழில்நுட்பத்தில் SUN EDISON, WELSPUN, SANFRA, SUNBORNE, NEEPCO, ASUN, HINDUSTAN CLEAN ENERGY, ADANI, SUZLON, EMMVEE, GAMESA, EMPEREAL ஆகிய 12 நிறுவனங்கள் மட்டுமே ரூபாய் 35,000 கோடிக்கு மேல் தென் மாவட்டங்களில் முதலீடு செய்ய உள்ளன. இந்த முதலீடுகளால், தென் மாவட்டங்களில் இருக்கும் இளைஞர்கள் திறன் வாய்ந்தவர்களாக இருந்தால், குறைந்தபட்சம் 2 இலட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு உருவாக வாய்ப்பிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தென் மாவட்ட இளைஞர்களை திறன் மிகுந்தவர்களாக உருவாக்க Institute of Road Transport மூலமாக விருதுநகரில் நவயுகத் துறைகளான Tower Technology, Solar Technology, Chemical Technology, Printing Technology ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு Polytechnic உருவாக்கப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இதுகாறும் அரசு Polytechnic ஒன்று கூட இல்லாத தொழில் நிறைந்த, தொழில்முனைப்பு நிறைந்த விருதுநகர் மாவட்டம் இந்த முயற்சியால் பயன்பெறும். போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படும் IRT மூலமாக திறன் வளர்த்தல் திட்டங்களை உள்ளடக்கிய ஒரு Government Polytechnic விருதுநகரில் உருவாக்கப்படுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, IRT மூலமாக முதன்முதலாக நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் 1992 ஆம் ஆண்டு மூன்று பாலிடெக்னிக்குகளைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, விருதுநகர் மாவட்டத்திற்கு அருகில் இருக்கின்ற திருநெல்வேலி மாவட்டத்தில் Polytechnic இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது புதிய கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். புதிய கல்லூரி வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 10 ஏக்கர் நிலம் வேண்டும், தொடராச் செலவினமாகக் குறைந்தபட்சம் ரூபாய் 15

2015 செப்டம்பர் 16]

கோடியிலிருந்து ரூபாய் 20 கோடி அளவிற்கு வேண்டும். தொடரும் செலவினமாக 2 கோடி ரூபாய் அளவிற்கு வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்திற்கேற்ப, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை சார்ந்த* IRT, *பர்கூர், நெல்லை, குரோம்பேட்டை ஆகிய இடங்களில் நடத்திவரும்* Polytechnics *அனைத்திலும் திறன் வளர்த்தல் திட்டங்கள், அதாவது* (Skill Development Programmes) *நடத்துமா? இந்த 3 நிறுவனங்களிலும்,* IRT *நடத்தும்* Engineering College, *ஈரோட்டிலும், தொழில்முனைப்புள்ள மாணவர்களுக்கு* (Incubators) *அடைகாக்கும் நிறுவனங்கள் உருவாக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் ஓட்டுநர்கள், கண்டக்டர்கள் வாரிசுகளுக்காக* Medical College *மற்றும்* Engineering College *துவக்கப்பட்டு சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய* Course-*ஐ பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதியுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]